**செ. கு. எண்**: 404 **நாள்**: 10.11.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.11.2012

திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளம் காவல் நிலையத்தில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சண்முக சுந்தர் அவர்கள் 6.11.2012 அன்று நாங்குநேரி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. வீரபத்மநாபன் அவர்கள் 7.11.2012 அன்று ஆத்தூர் - கள்ளக்குறிச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராமசாமி அவர்கள் 8.11.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், செவ்வாய்பேட்டை தீயணைப்பு நிலையத்தில், தீயணைப்பு வீரராகப் பணி புரிந்து வந்த திரு.M. பாலன் அவர்கள் 8.11.2012 அன்று நாமக்கல்-சேலம் சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. ராமசாமி, தலைமைக்காவலர் திரு. வீரபத்மநாபன், காவலர் திரு. சண்முக சுந்தர் மற்றும் தீயணைப்பு வீரர் திரு. பாலன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான உதவி ஆய்வாளர் திரு. ராமசாமி, சாலை விபத்துகளில் உயிரிழந்த தலைமைக் காவலர் திரு. வீரபத்மநாபன், காவலர் திரு. சண்முக சுந்தர் மற்றும் தீயணைப்பு வீரர் திரு. பாலன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**